RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/ irjt224s258

OPEN ACCESS

# கந்தபுராணம் வழி சிவன் பார்வதி திருமணத்தில் பண்பாட்டுப் பதிவுகள்

க. பவித்ரா [அ, *], சு. பரணி [அ]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர-43, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Records on Shiva Parvati’s Marriage through Kandhapuranam

K. Pavithra [a, *], S. Bharani [a]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-43, Tamil Nadu, India

* Corresponding Author: pavikaruna23@gmail.com

Received: 22-08-2022
Revised: 13-10-2022
Accepted: 29-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Culture is a reflection of society’s history. Culture cannot be narrowed down to specific boundaries. The literature of the people is very helpful to know the culture of the people. Thus, the Kandhapuranam composed by KachiyappaSivachariyar is a storehouse of Culture. Kachiyappar has told not only mythological stories but also the culture of the Tamils of his time. Kachiyappar describes the marriage of Shiva and Parvathi in great detail. KachiyappaSivachariyar explains the marriage rituals of the Andhanars in the marriage of Shiva and Parvathi. Based on his notes, this article examines the marriage ceremony of the Andhanars of medieval time.

**Keywords:** Culture, Kandhapuranam, Marriage of Shiva and Parvathi, Marriage rituals, Kannikadanam

## முன்னுரை

சமூகமானது காலந் தோறும் மாற்ற மடையக்கூடியது. சமூக மக்களின் வாழ்க்கை நிலையும் மாற்றமடைகின்றன. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஏற்படும் பண்பாட்டு மாற்றங்களை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இலக்கியங்கள் நம் நாட்டின் பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்குகின்றது. அவற்றின் மூலமே அக்கால சமூகச் சூழலை நாம் அறிகின்றோம். கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணம் இடைக்காலத் தமிழ் இலக்கியமாகும். கந்தபுராணம் ஓர் கலைக்களஞ்சியம் என அறிஞர்களால் கழப்படுகிறது பண்பாட்டுத் தரவுகள் பலவற்றையும் கொண்டுள்ளது. அவ்வகையில் திருமணம் பற்றிய பண்பாட்டுப் பதிவுகளை சிவபெருமான் - பார்வதி திருமணத்தின் வழியே ஆராய்ந்து அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## பண்பாடு

பண்பாடு என்னும் சொல்லானது ஓர் சமுதாயத்தில் மக்களிடையே நீண்டகாலமாக நிலைத்து நிற்கும் பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், காலங்காலமாகப் பின்பற்றப்படும் செயல்முறைகள் முதலியவற்றைக் குறிப்பதாக அமைகின்றது. ‘பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட்கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகிய யாவற்றினதும் தொகுதியாகும். ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகளே, கல்வி, விஞ்ஞானம்,

இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியனவற்றின் தொகுதியாகும் என கார்த்திகேசு சிவத்தம்பி பண்பாட்டிற்கு விளக்கமளிக்கிறார் (Karthikesu Sivathambi, 1994). தமிழருடைய பண்பாடு, சிறப்பும் செம்மையும்வாய்ந்ததாகும். காலமாற்றத்தினால் மக்களின் பண்பாட்டில் சீரிய வளர்ச்சி நிலை காணப்படுகின்றது. அவற்றை இலக்கியங்களும் பிரதிபலிக்கின்றன.

## சிவன் பார்வதி திருமணம்

கந்தபுராணத்தில் இடம்பெறும் தெய்வீகத்திருமணங்களுள் சிவன் பார்வதி திருமணமும்ஒன்றாகும். சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடைபெற்றதை விவரிக்கும் கச்சியப்ப சிவாச்சாரியார் அக்கால வழக்கத்தில் இருந்த திருமண முறைகளைக் கைக்கொண்டு விவரிக்கிறார்.

திருமணம் என்பது மக்களின் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. அறிஞர் ஞா.தேவநேயன் அவர்கள், 'ஓர் ஆடவனும் ஒரு பெண்டும் கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்றுசேருவதேமணமாம். மணத்தல் கலத்தல் அல்லது கூடுதல் மணவாழ்க்கைக்கென்றே இறைவன் மக்களை ஆணும் பெண்ணுமாய்ப் படைத்திருப்பதாலும், அதனிடத்து மிகுந்த அறப்பொறுப்புள்ளமையாலும், அது ஆயிரங்காலத்துப் பயிர் ஆகையாலும் வாழ்க்கைத் துணைவர் இருவரும் தெய்வத்தின் முன் அல்லது தெய்வத்தின் பேரில் பலரறிய ஆணையிட்டுக் கூடுவதாலும் மணம் தெய்வத்தன்மை பெற்றுத் திருமணம் எனப் பெற்றது' என்பர் (Sasivalli, 1985).

சங்க காலத்தே திருமணமானது களவு மணம், கற்பு மணம் என இருவகைப்பட்டதாக இருந்தது. மேலும், எண்வகை மணங்கள் இருந்ததை தொல்காப்பியமும் குறிப்பிடுகின்றது. திருமண முறைகள் பல்வேறு காலகட்டங்களில் பல வகையான மாற்றங்களை அடைந்துள்ளது. சங்க காலத்தில் இருந்த திருமண முறைகள் சில மாற்றம் பெற்றும், சில விரிவடைந்தும் மேலும் சில புதியனவும் கலந்து இடைக்காலத்தில் வளர்ச்சி பெற்றது.

கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ள தெய்வத் திருமணங்கள் நான்கினுள் இரண்டு சிவன் பார்வதிக்கும், ஒன்று முருகன் தெய்வயானைக்கும், மற்றொன்று முருகன் வள்ளிக்கும் கூறப்பட்டுள்ளது. இதில் முருகன் வள்ளி திருமணம் சங்க கால களவு மணத்தை ஒத்தும் பிற திருமண முறைகள் கற்பு மணத்திற்கு சான்றாகவும் உள்ளன.

## பார்வதியின் தவம்

இமயமலையின் அரசனாகிய இமவானுக்கு பார்வதி மகளாக வளர்கிறார். ஐந்து வயது நிறைவடைந்ததுமே சிவபெருமானை மணந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தினால் தன் தந்தையின் அனுமதியோடு தவச்சாலையில் பார்வதி தவம் செய்யத் தொடங்குகின்றார். பார்வதியின் தவத்தையும், உறுதியையும் அறிய விரும்பும் சிவபெருமான் முதியவர் வேடமிட்டு பார்வதியை சோதிக்கிறார்.

"முடிவிலாதுறை பகவனென் வேட்கையை முடியாது

விடுவ னென்னினுந் தவத்தினை விடுவனோ மிகவின்னங்

கடிய நோன்பினை யளப்பில செய்துயிர் கழிப்பேன்நான்

நெடிது மூத்தலின் மயங்கினை பித்தனோ நீயென்றாள்."

என்று முதியவர் வேடமிட்டு வந்த சிவபெருமானிடம் தன் உள்ளத்து உறுதியை பார்வதி வெளிப்படுத்த, சிவபெருமான் மகிழ்ந்து தன் உண்மை உருவம் காட்டி, பார்வதியை விரைந்து மணமுடிப்பதாகக் கூறிச் செல்கிறார் (Sanmugasundaram, 2019).

## பெண் கேட்டல்

பார்வதியை மணம் முடிக்க விரும்பும் சிவபெருமான் முறைப்படி பெண் கேட்கிறார். முனிவர்களுள் சிறந்தவர் எனப்படும் அகத்தியர், ஆங்கீரசர், கௌதமர், காசிபர், புலத்தியர், மார்க்கண்டர், வசிட்டர் ஆகிய எழுவரையும் இமவானிடம் சென்று பெண் கேட்டு வருமாறு வேண்டுகிறார். முனிவர்களும் அதை முறைப்படி ஏற்று இமவானிடம் சென்று,

"மங்கையை வதுவை செய்வான் மன்னுயிர்க்(கு) உயிராய் நின்ற

சங்கரன் நினைந்துன்னோடுசாற்றுதற்(கு) எம்மைஉய்த்தான்

இங்(கு)இ(து)எம் வரலாறு என்ன இசைவுகொண்(டு) இறைவன் சொல்வான்"

என பெண் கேட்கின்றனர் (Sanmugasundaram, 2019). இமவான் ஒப்புக்கொண்ட போதிலும் பார்வதியின் தாயான மேனை சற்று தயங்குகிறார். தான் மணந்த தாட்சாயினியின் தந்தையான தட்சனையே சிவபெருமான் அழித்ததால் பார்வதியை சிவபெருமானுக்கு மணம் செய்து கொடுக்க மேனை யோசனை செய்கிறார். முனிவர்கள் எழுவரும் உண்மை நிலையை விளக்கி உரைக்க மேனை தன் அறியாமையை நீக்கி பார்வதியை மணம் செய்து கொடுக்க சம்மதிக்கிறார்.

## திருமண ஏற்பாடுகள்

தன் மகளான பார்வதிக்கு சிவபெருமானோடு திருமணம் நடைபெற உள்ளதை எண்ணும் இமவான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறார். திருமணத்திற்கான ஏற்பாடுகளை உடனடியாக தொடங்குகிறார். திருமணத்திற்கு தேவர்கள், முனிவர்கள் என பலரும் வருகை தர இருப்பதால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்த தேவதச்சனான விசுவகர்மனுக்கு வேண்டுகோள் விடுக்கிறார்.

தற்காலத்தே திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் கவனித்து செய்து கொடுப்பதற்கென்றே பல நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நம்முடைய தேவைக்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும் திருமணம் தொடர்பான அனைத்து பணிகளையும் அவர்களே செய்து முடித்துக் கொடுப்பது தற்போது நடைமுறையில் உள்ளது.

அதுபோல வேமலையரசனான இமவான் திருமண ஏற்பாடுகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதை தேவதச்சனிடம் கூற அவர் திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்கிறார். விருந்தினர்கள் தங்குமிடம், சுற்றி பார்க்கும் இடம், அவர்களுக்கு வேண்டிய வசதிகள், திருமண மண்டபத்தை உருவாக்குதல் என அனைத்து வேலைகளும் நடைபெறுகின்றது.

## திருமண அழைப்பும் சுற்றத்தார் வருகையும்

திருமணத்திற்கான ஏற்பாடுகள் ஒருபுறம் நிகழ, மறுபுறம் திருமணத்திற்கு அழைப்பு விடுக்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. தற்போது திருமணப் பத்திரிக்கைக் கொடுத்து திருமணத்திற்கு வருக என அழைக்கும் பழக்கம் உள்ளது. பார்வதியின் திருமணத்திற்கு வருகை புரிய வேண்டுமென தூதர்களை பல்வேறு இடங்களுக்கும் இமவான் அனுப்பி வைக்கிறார். தூதர்கள் சென்று தேவர்கள், முனிவர்கள், அரசர்கள் என அனைவருக்கும் சென்று திருமணம் பற்றிய தகவல்களைக் கூறி வரவேற்கின்றனர். இமவான் மணமகனான சிவபெருமான் இருப்பிடத்திற்கு நேரில் சென்று சோதிட நூல் வல்லோர் குறித்துக் கொடுத்த பங்குனி உத்திரநன்னாளிலே திருமணம் செய்து கொள்ள வருக என அழைப்பு விடுக்கிறார்.

திருமண வீடு எப்போதுமே கலகலப்பாக இருக்கும். பல நாட்கள் கழித்து அனைத்து சொந்தங்களையும் ஒருங்கே காணும் நிகழ்வாக இருக்கும். திருமண விழாவிற்குச் செல்லும் போது மகிழ்ச்சியும், மணமக்களைப் பற்றிய பேச்சுக்களுமே நிறைந்து இருக்கும். சிவபெருமான் - பார்வதி திருமணத்திற்கு வருவோர் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன், சிவன் மற்றும் பார்வதியின் புகழுரைகளோடு திருமணத்திற்கு வருகை புரிகின்றனர். காளிகள், சுவர்க்கலோக மகளிர், கலைமகள்,

திருமகள், பிரமன், விஷ்ணு, தேவர்கள், உருத்திரர்கள், கணங்கள் என அனைவரும் திருமணத்திற்கு வருகை புரிகின்றனர்.

## திருமணக்கோலம்

திருமணத்தின் போது மணமகளும், மணமகனும் தங்களை அழகுபடுத்திக் கொள்ளுதல் வழக்கத்தில் உள்ளது. மணமகளான பார்வதியை அலைமகள், கலைமகள் மற்றும் பிற தேவ மகளிர் அனைவரும் சேர்ந்து அலங்கரிக்கின்றனர்.

"நெறிதரு தவத்துரு நீக்கிக் காமருக்

குறையுள தாகிய உமைதன் மெய்யினைக்

குறைதவிர் நிலைமையிற் கோலஞ் செய்தனர்

இறைவனை வழிபடும் இயல்பி னாரென"

என பார்வதியின் தவவேடத்தைக்களைந்து மணமகளுக் குரியவாறு அழகுபடுத்துகின்றனர் (Sanmugasundaram, 2019). மணமகனான சிவபெருமானையும் திருமணக்கோலம் கொள்ளுமாறு பிரமன் வேண்டுகிறார். சிவபெருமானும் அதை ஏற்று,

ஒருதன் மெய்யணி பணிகளே அணிகளாய் உறுவான்

திருவுளம் கொள அவ்வகையாகிய செகத்தை"

என ஆபரணங்கள் அணிந்து திருமணக் கோலம் ஏற்கிறார் (Sanmugasundaram, 2019).

## மாப்பிள்ளை அழைப்பு

மணமகனை ஊர்வலமாக சீர்வரிசைகளுடன் மண்டபத்திற்கு அழைத்து வந்து மணமேடையில் அமர வைக்கும் முறை மாப்பிள்ளை அழைப்பு என அறியப்படுகிறது. மணமகனான சிவபெருமான் இடபவாகனத்தில் ஏறி வர, நந்திதேவர், தேவர்கள், முனிவர், தும்புரு, நாரதர், வித்யாதரர், சந்திரன், சூரியன், இந்திரன், பூதகணங்கள், உருத்திரர்கள் முதலிய பலரும் அவரை சூழ்ந்து வந்தனர். சிவபெருமானையும் அவரோடு வருபவரையும்,

"அனைய தன்மையி லாதியம் பண்ணவன்

பனிகொள் வெற்பிற் படரஅம் மன்னவன்

இனிய கேளொ டெதிர்கொடு தாழ்ந்துதன்

புனித மாநக ரிற்கொடு போயினான்"

என இமவான் வரவேற்று நகரினுள் அழைத்துச் செல்கிறார் (Sanmugasundaram, 2019). சிவபெருமானின் திருமணக் கோலத்தைக் கண்டு நகரப் பெண்டிர் மையல் கொண்டு நிற்பதாக கச்சியப்பர் சுவைபடக் கூறியுள்ளார். சிவபெருமானை பெண் வீட்டார் பலவகையான சீர் வரிசைகளைக் கொண்டு வரவேற்கின்றனர்.

"இருவ கைப்படு மெண்வகை மங்கலப்

பொருண்மை முற்றவும் பூவையர் பற்பல

வரிசை யிற்கொடு வந்தெதிர் எய்தினர்

அரிய யற்கரி தாகிய அண்ணல்முன்"

என பதினாறு வகை மங்களப் பொருட்களைக் கொண்டு வரவேற்றதை கச்சியப்பர் குறிப்பிடுகிறார் (Sanmugasundaram, 2019). மேலும், பார்வதியின் தாயான மேனை விண்ணுலகப் பெண்களுடன் வந்து காமதேனுவின் பாலினால் பாத பூஜை செய்வதையும் கச்சியப்பர் குறிப்பிடுகிறார்.

## மணப்பெண் வருகை

மாப்பிள்ளையான சிவபெருமானை வரவேற்று திருமண மண்டபத்தில் அவர்க்குரிய ஆசனத்தில் அமர வைத்த பிறகு மணமகளான பார்வதி அழைத்து வரப்படுகிறார். துர்க்கை பார்வதிக்கு காவலாக இருக்க, இந்திராணி வெற்றிலைப் பாக்கு உடைய அடைப்பையைத் தாங்கிய படியும், கங்கை முதலிய நதிகள் சாமரம் வீசிய படியும், காளிகள் குடைபிடித்த படியும், திருமகள் பார்வதியின் கையைப் பிடித்தபடியும் மண்டபத்திற்குள் வருகின்றனர். பார்வதி சிவபெருமானின் பக்கத்திலுள்ள ஆசனத்தில் அமர வைக்கப்படுகிறார். அதன்பிறகு திருமணச் சடங்குகள் தொடங்குகின்றன.

## தாரை வார்த்தலும் திருமணச் சடங்கும்

வைதீக திருமணச் சடங்குகளுள் முக்கியமானது தாரை வார்த்தல் என்பதாகும். இது கன்னிகாதானம் என தற்போது அறியப்படுகிறது. ‘எல்லா தேவதைகளும், எல்லா சாதியினரும், உறவினரும், நட்பினரும் சபையாருஞ் சேர்ந்திருக்கின்ற தருணத்தில் பெண்ணின் பெற்றோர் நீர் வார்த்துக் கன்னிகாதானம் செய்யவும், அந்தத் தாரையை நான் ஏற்றுக்கொண்டேன் என்று மாப்பிள்ளை சொல்லவும் அதைப் பலரறிய உறுதிப்படுத்தவே இச்சடங்கு நடைபெறுவதாகும்’ (Sasivalli, 1985).

சிவபெருமானையும் பார்வதியையும் மணமேடையில் அமர வைத்த பிறகு திருமணச் சடங்கிற்குத் தேவையான பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன. மேனை இமவானின் கைகளில் நீரைவிட, சிவபெருமானின் பாதங்களைக் கழுவி, சந்தனம் பூசி பூக்களிட்டு இமவான் பூஜை செய்கிறார். மணமகனின் பாதங்களை மணப்பெண்ணின் சகோதரர் கழுவுவதே நடைமுறையாகும். சிவன் - பார்வதியின் திருமணம் தெய்வத் திருமணம் என்பதாலும், சிவபெருமானின் மேன்மையைக் காட்டவும் மணமகளின் தந்தையான இமவான் மணமகனான சிவபெருமானின் பாதங்களைக் கழுவுவதாக புராணத்தில் குறிப்பிடப்படுகின்றது. அதன் பின்னர்,

“பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீன் றாடன் கையைப்

பாசம தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து

நேசமொ டளித்தே னென்னா நெடுமறை மனுக்கள் கூறி

வாசநல் லுதக முய்த்தான் மருகனென் றவனை யுன்னி”

என தன் மகளான பார்வதியின் கைகளை இமவான் எடுத்து சிவபெருமானின் கைகளில் வைத்து, ‘என் மகளை உனக்கு அளித்தேன்’ என்று கூறி பார்வதியை தாரை வார்க்கிறார் (Sanmugasundaram, 2019). இந்நிகழ்வின் போது இசைக்கருவிகள் முழங்க, வந்தோர் அனைவரும் ஆரவாரம் செய்து மகிழ்கின்றனர். இதன் பிறகு பால், வாழை, மா, பலா, நெய், தேன் முதலியவற்றைக் கொடுத்து சிவபெருமானை இமவான் உண்ணச் செய்கிறார்.

மண்ணுலகம், விண்ணுலகம் ஆகியவற்றில் வாழ்பவர் அனைவரும் தத்தம் முறைப்படி திருமணச் சடங்கினை நிகழ்த்துதல் வேண்டும் என்பதால் அவற்றை முறைப்படி செய்யலாம் என பிரமன் சிவபெருமானிடம் வேண்டி திருமணச்சடங்குகள் செய்யப்படுகிறது. ‘அந்தணர் கரணம் எல்லாம் ஆற்றியே’ என்பதின் மூலம் திருமணச் சடங்குகளானது அந்தணர்களுக்கு உரிய முறையில் நடைபெற்றது என்பதை அறிய முடிகிறது (Sanmugasundaram, 2019).

## விருந்தினரை உபசரித்தல்

திருமண நிகழ்வுகள் முடிந்த பின்னர் வந்தோர் அனைவருக்கும் விருந்து கொடுத்து உபசரிப்பது பண்பாடாகும். விருந்தோம்பலின் அவசியத்தை திருவள்ளுவர்,

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை

பருவந்து பாழ்படுதல் இன்று"

என்று கூறுகிறார் (Parimelazhagar, 2002). இமவான், திருமணத்திற்கு வந்தோர் அனைவருக்கும் உணவும் பல பரிசு பொருட்களையும் கொடுக்கிறார். சிவபெருமானுக்கு பூஜை செய்து வைக்கப்பட்ட நைவேத்தியங்களையும் அனைவருக்கும் உண்ணக் கொடுத்ததை,

"இமகிரிபுரந்த அண்ணல் ஈண்டுறைநீரர்க் (கு) எல்லாம்

அமலன(து) உணவு மற்றும் அளிப்பன்"

எனக்கச்சியப்பர் கூறுகிறார் (Sanmugasundaram, 2019). அனைவரும் மகிழ்ந்து உண்டு வாழ்த்தி விடைபெறுகின்றனர். திருமணமானது இனிதே நடைபெற்று அனைவரும் மகிழ்வுடன் தத்தம் இருப்பிடங்களுக்குச்சென்று சேர்ந்தனர் என்றும், சிவபெருமானும் பார்வதியை தன் இருப்பிடமான கயிலை மலைக்கு அழைத்துச் சென்றார் எனவும் கச்சியப்பர் கூறுகிறார்.

## முடிவுரை

ஒரு கூட்டத்தினரின் வழிபாடு, நடைமுறை, பழக்கவழக்கம் முதலிய பலவும் பண்பாடு என்பதின் கீழ் அடங்கும். அவற்றுள் திருமணம் என்பது முக்கியமான பண்பாட்டு நிகழ்வாகக் கருதப்படுகிறது. கந்தபுராணத்தில் சிவன் - பார்வதி ஆகியோரது திருமணத்தின் வழி பண்பாட்டுப் பதிவுகளைக் காண முடிகிறது. மாப்பிள்ளை அழைப்பு, சுற்றத்தாரின் வருகை, திருமண ஏற்பாடுகள் முதலியவை மிக விரிவாக கந்தபுராணத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. அந்தணர்களின் முக்கியச் சடங்கான தாரை வார்த்தல் இடம் பெற்றுள்ளது. தாலி கட்டும் முறை அந்தணர்களிடையே இருப்பினும் சிவன், பார்வதிக்குத் தாலி அணிவித்ததாக குறிப்பிடப்படவில்லை. மணமகனுக்குச் செய்யப்படும் பாத பூசை மணமகளின் சகோதரரால் நிகழ்த்தப்படுதல் முறையாகும். இங்கே சிவபெருமானின் உயர்வு கருதி, இமவானே பாதபூசை செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. சிவன் - பார்வதி திருமண சடங்கு முறைகள் அந்தணர்களின் பண்பாட்டுப் பதிவுகளாக உள்ளன. அந்தணர்களின் சடங்கு முறைகள் பின்பற்றப்பட்டு திருமணம் நிகழ்ந்தது என்பதை கச்சியப்பர் குறிப்பிட்டுள்ளதையும் அறிய முடிகிறது. தமிழரின் முக்கியப் பண்பாட்டுச் சின்னமாக விளங்கும் திருமணமானது காலந்தோறும் வளர்ச்சி பெற்றது. கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் அக்கால நடைமுறையிலிருந்த திருமண வழக்கைக் கையாண்டுள்ளார் என்பதை அவருடைய பாடல்களின் மூலம் அறிய முடிகின்றது. பெண் கேட்டல், அழைப்பு விடுத்தல், மணமகன் ஊர்வலம், தாரை வார்த்தல் முதலிய திருமண சடங்குகள் அக்காலத்தே நடைபெற்றதை அறிய முடிகின்றது. அந்தணர் திருமண முறைகளை சிவபெருமானின் திருமணத்தில் ஏற்றி கச்சியப்பர் பாடியுள்ளதையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

## References

Karthikesu Sivathambi (1994) Tamil Samoogamum Panpaatin Meel Kandupidipum, New Century Book House (P) Ltd, Chennai, India.

Parimelazhagar (2002) Thirukkural, Saratha Pathipagam, Chennai, India.

Sanmugasundaram (2019) Kandhapuranam Moolamum Uraiyum (6 Parts), Paari Nilayam, Chennai, India.

Sasivalli, V.C (1985) Tamilar Tirumanam, International Institute of Tamil Studies, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License